**தம்புள்ளை மாநகர சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

தம்புள்ளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே

விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் ரூபா. 52,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாநகர சபை பெயர்ப் பதாதை மற்றும் ரூபா. 1,700,000 ஆகிய கழிவுகளை அரைக்கும் இயந்திரம் ஆகியன மூலதனமாக்கும் போது குறித்த சொத்துக்கள் கணக்கில் செலவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தால் பங்களிப்புச் செய்யும் கணக்கில் வரவு வைக்க வேண்டியிருந்த போதும், அத் தொகை திரண்ட நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | சொத்துக்களை பௌதிக ரீதியில் நீக்க வேண்டிய தேவை இல்லாதிருந்த போதும் தவறாக ரூபா. 904,195 பெறுமதியான 30 இயந்திர மற்றும் உபகரண அலகுகள் நிலையான சொத்துக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியின் மூலம் திகம்பதஹா கழிவு முகாமைத்துவ நிலையத்தின் மின் தொகுதி மற்றும் உடற்பயிற்சி ஓடுபாதை ஆகியவற்றுக்காக செலவிடப்பட்ட ரூபா. 21,531,365 சரியாக காணி மற்றும் கட்டடங்களின் கீழ் முன்னைய ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் அதனை வீதி அபிவிருத்தி எனக் குறிப்பிட்டு தவறாக அப் பெறுமதி மீளாய்வாண்டில் கணக்ககளிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. | வீதி அபிவிருத்தி எனக் கருதி நீக்கப்பட்டதாக | வளாகத்தின் பெறுமதியை அதிகரிக்கும் நிர்மாணம் என்பதால் சொத்துக்களுடன் பொருந்துதல் வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டில் கழி பவுசர் சேவையை வழங்கியமைக்காக தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 66,400 வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 370,830 பெறுமதியான நுகர்வுப் பொருள் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் முச்சக்கர வண்டி வாகன பட்டியலிடப்பட்ட தொகை ரூபா. 211,925 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பரிசீலனை செய்து எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் பதிவுச் சான்றிதழ் மற்றும் பரிசோதனைக் கட்டண வருமானம் ரூபா. 53,917 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டில் தாமதமாக கடை வாடகை செலுத்தியமைக்காக அறவிடப்பட்ட தண்டப்பணம் ரூபா. 115,884 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல் களிலிருந்து அறவிடப்படுகின்ற வியாபார வரி வருமானம் ரூபா. 908,298 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட நிலுவை வியாபார வரி ரூபா. 190,201 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டில் முன்பு பெறப்பட்ட மீன் கடை கேள்வி வருமானம் ரூபா. 600,900 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பரிசீலனை செய்து எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டில் மீன் கடை கேள்வி வருமானம் ரூபா. 220,197 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று கொடுப்பனவு நிறைவு செய்யப்பட்ட ரூபா. 773,310 பெறுமதியான 03 கடன் மீதிகள் மற்றும் குறிக்கப்பட்ட செயற்பாடுகள் ஒழுங்காக நிறைவேற்றப்படாததன் காரணமாக கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா. 909,650 ஆகவிருந்த 12 கடன் கொடுத்தோர் மீதிகள் கடன் கொடுத்தோர் மீதியாக தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | 2021 ஆம் ஆண்டுடன் தொடர்பான மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 98,285 ஆகவிருந்த ஆலோசனை கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பரிசீலனை செய்து எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (கா) | 2020, 2021 மற்றும் 2022 வருடங்களுடன் தொடர்பான மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 34,438,024 ஆகிய முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் பட்டோரின் கீழ் இனங் காணப்பட்டிருக்காதத ன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதாக | - மேற்படி - |
| (கி) | களஞ்சிய முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்படாது இருப்பு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் இருப்பு | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளுக்கிடையிலான வித்தியாசம் குறை மற்றும் மேலதிக ஒதுக்கக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டதன் காரணமாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்ட மொத்த செலவினம் ரூபா. 4,838,924 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எடுப்பதாக | |
| (கீ) | வருமானச் செலவுக் கணக்கில் குறைபாடு/மேலதிகம், குறை மற்றும் மேலதிக ஒதுக்கக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட வேண்டியிருந்த போதும், அவ்வாறு செய்யப்படாது பொதுப் பேரேட்டில் காணப்பட்ட சம்பளம் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்கினதும் வருமானக் கணக்கினதும் பெறுமதிகள் குறை மற்றும் மேலதிக ஒதுக்கக் கணகில் குறிக்கப்பட்டதன் காரணமாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்ட மேலதிகத்திற்கும் குறித்த குறை மற்றும் மேலதிக ஒதுக்கக் கணகில் செய்யப்பட்ட சீராக்கல்களின் அடிப்படையில் ஏற்பட்ட மேலதிகத்திற்கும் இடையில் ரூபா. 137,072 வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்கள் சமப்படுதல் சம்பந்தமான சிக்கல்கள் காணப்பட்டன. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (கு) | திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்திலும் மற்றும் தம்புள்ளை வள நிலையத்திலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட ரூபா. 3,362,550 இயற்கை ஒர இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (கூ) | திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தில் உக்கலடையக்கூடிய கழிவுகளை அகற்றுவதற்கான கட்டணமாக அனுராதபுர மாநகர சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா. 883,875 நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதால் கணக்கீடு செய்யப்படவில்லை என்பதாக | கணக்கீடு செய்யப்பட்டு முறையாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கணக்கிற்கும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தால் பங்களிப்புச் செய்யும் கணக்கிற்கும் இடையில் ரூபா. 427,638 இணங்காமை காணப்பட்டது. | பரிசீலனை செய்து எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி தாயரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையினை அதனுடன் தொடர்பான உபயோகப் பதிவேடுகளிலுள்ள மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 4,126,090 இணங்காமை காணப்பட்டது. | தவறுதலாக நடைபெற்றுள்ளத | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டிற்கான நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 23,182,499 கூட்டுப் பெறுமதியான 04 சொத்து மீதிகள், ஒரு பொறுப்பு மீதி மற்றும் திரண்ட நிதியிலிருந்து பதிவழிக்கப்பட்ட 02 மீதிகளுடன் தொடர்பான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | எதிர்காலத்தில் அட்டவணைகளை சரியான முறையில் பராமரித்துச் செல்வதாக | கணக்கு மீதிகளுடன் தொடர்பான பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 1646 | மாநகர சபையின் 22 வாகனங்களின் செலுத்தல் குறிப்புகள் 08 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரையிலான காலப்பகுதியிலிருந்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாளதுவரையாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| **(ஆ)** | 2017 திசம்பர் 21 ஆம் திகதிய 2/2017 இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | மாநகர சபையில் 14 வாகனங்களை சபையின் உபயோகத்திற்காக ஈடுபடுத்தி 01 முதல் 14 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும், சபையின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 66,694,541 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,000,278 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆணையாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 44,950,000 | 26,946,796 | 33,313,525 | 6,102,728 | 5,000,000 | 5,662,506 | 3,933,669 | 12,469,464 |
| (ii) | வாடகை | 14,784,220 | 1,413,987 | 20,458,260 | 16,471,247 | 9,566,400 | 8,510,240 | 5,947,612 | 35,515,520 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 2,495,000 | 2,985,062 | 3,581,576 | 1,773,036 | 5,000,000 | 5,152,294 | 5,152,294 | 2,369,550 |
| (iv) | நீதிமன்ற தண்டப்பணம் | 50,000 | 1,640,350 | 569,708 | 1,107,500 | 1,500,000 | 71,656 | 43,798 | 27,858 |
| (v) | முத்திரைக் கட்டணங்கள் | 40,000,000 | 46,114,724 | 19,021,722 | 32,554,085 | 10,000,000 | 11,068,800 | 9,741,700 | 5,461,083 |
| (vi) | | 19,500,000 | 28,685,198 | 51,605,007 | 9,119,468 | 18,228,400 | 14,573,127 | 6,190,398 | 32,039,277 |
| | மொத்தம் | 121,779,220 | 107,786117 | 129,540,805 | 67,128,064 | 49,294,800 | 45,038,623 | 31,009,471 | 87,882,752 |

## 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி மற்றும் வரியுடன் தொடர்பான சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டினைப் பயன்படுத்தி மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதாக | சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று ரூபா. 4,562,374 வீதவரி மீதி நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா. 10,000இற்கு மேற்பட்ட நிலுவை மீதிகளுடன் கூடிய 72 வீதவரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 1,074,245 தொகை அடங்கியிருந்தது. மாநகர சபைச் சட்டத்தின் 247 ஆ (4) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **<u>வாடகை</u>**<br>மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று ரூபா. 8,896,350 ஆகிய கடை வாடகை வருமானம் மற்றும் ரூபா. 3,921,471 ஆகிய நிலுவை கடை கேள்வி வாடகை வருமானம் என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | **<u>அனுமதிப்பத்திரக் கட்டணம்</u>**<br>மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 03 ஹோட்டல்களிலிருந்து வியாபார வரி ரூபா. 1,389,987 அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ளை பிரதேச சபை மூலம் மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் மற்றும் மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 டிரக்டர் டேலர்கள் மற்றும் சபைக்கு கிடைக்கப்பெற்ற மூலாதாரத்தை கண்டறிய முடியாதிருந்த ஒரு மோட்டார் வாகனம் உள்ளடங்கலாக 12 வாகனங்களுக்கான மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் திணைக்களம் வழங்கிய பதிவுச் சான்றிதழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவுச் சான்றிதழ் களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 24 முதல் 2023 ஜனவரி 17 வரையான காலப்பனுதியினுள் ஏற்பட்டிருந்த 20 வாகன விபத்துக்களில் 13 விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அவ் விசாரனை அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 10 வாகன விபத்துக்கள் மற்றும் நட்டங்கள் ஏற்பட்டு 02 முதல் 06 வருடங்கள் வரை கடந்திருந்த போதும், நி.பி.104(4) இறுதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 10 வாகன விபத்துக்கள் | விசாரனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | விசாரனைகளை நடாத்தி நட்டங்களை அறவீடு செய்வதுடன் விசாரனை பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பிலான அறிக்கை நி.பி. 104(4) விசாரணை அறிக்கை ஆகியன முடிக்கப்பட்டிருந்த போதும் அவ்வறிக்கைகள் கணக்காய்வுத் தினமாகிய 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | முன்னாள் நகர பிதாவின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 295,705 பெறுமதியான 26 வகையான பொருட்களை பதவிக் காலம் முடிவுற்ற 2023 மார்ச் 15 ஆம் திகதி மாநகர முதல்வரிடமிருந்து மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்பகட்ட விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக | நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டு ரூபா. 1,221,450 செலவில் நிர்மாணிக்கப்பட்ட திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தின் உள்ளக வீதிகள் மற்றும் மின் ஒளித் தொகுதியானது சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து சுற்றுலாத் துறையில் நிலைத்திருப்பதனை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் 74 மின்சாரக் கம்பங்களில் 42 கம்பங்கள் சேதமடைந்திருந்தன. | பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். |
| (உ) | தம்புள்ளை மாநகர சபையின் மூலம் ரூபா. 443,225 செலவில் 2021ஆம் ஆண்டு வீதவரி மற்றும் வரியினை அறவிடுவதற்காக அமைக்கப்பட்ட கணினி மென்பொருள் தொகுதியானது எதிர்பார்த்த தேவைக்காக பயன்படுத்தப்படாது பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டது | புதிய கணினி தொகுதியொன்றின் மூலம் செயற்பாடுகளை மேற்கொள்வதாக | மென்பொருள் தொகுதியினை பயன்படுத்தாத அதிகாரிகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | தம்புள்ளை கிராம எழுச்சி வளாகத்தில் அமைந்திருந்த பழைய ஆயர்வேத கட்டடம் எழுத்து மூல ஒப்பந்தங்கள் எதுவுமின்றி மற்றும் வாடகை அறவிடப்படாது 2022 ஒக்டோபர் 06ஆம் திகதி முதல் 02 வெளித் தரப்பினருக்கு விளையாட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த நபர்களினால் மாநகர சபையின் அனுமதியின்றி சுமார் ரூபா. 400,000 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதற் கும் வாடகையொன்றை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | ஒழுங்கான வழிமுறையின் அடிப்படையில் சொத்துக்களை வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1980இன் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்திற்கு அமைவாக சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 09 வியாபாரங்கள் சூழல் அனுமதிப்பத்திரத்தைப் பெறாதிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா. 40,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. | சூழல் அனுமதிப்பத்திரங்க ளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சூழல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை பயன்படுத்தும் 10 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்றற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா. 82,280,986 ஆகவிருந்த 18 சொத்து அலகுகளும் பெறுமதி மதிப்பிடப்படாத 02 வாகனங்களும் 01 முதல் 02 வருடங்கள் வரையான காலம் தொடக்கம் பயன்பாடற்ற அல்லது குறை பயன்பாடுடைய நிலையில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் எதிர்பார்த்த தேவைகளுக்காக பயன்படுத்துவதாக | சொத்துக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 22(1) பிரிவின் பிரகாரம் சனசமூக மற்றும் வினோத செயற்பாடுகளுக்காக சபைக்கு கையேற்கப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா. 9,230,500 ஆகவிருந்த 10 காணிகள் எதிர்பார்க்கப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்படாது 02 முதல் 11 வருட காலமாக பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் எதிர்பார்த்த தேவைகளுக்காக பயன்படுத்துவதாக | சொத்துக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.5 மனிதவள மகாமைத்துவம்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர தொழிலாளர்கள் 03 பேர் பதவிகளுக்குரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாது 03 முதல் 06 மாதங்கள் வரையான காலம் தொடக்கம் சாரதி பதவிக்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள் காரணமாக வேறு சேவைகளில் உள்ள ஊழியர்களை ஈடுபடுத்துவதற்கான தேவை ஏற்பட்டதாக | வெற்றிடங்களைப் பூரணப் படுத்திக்கொண்டு ஊழியர்களின் நிலையான பதவிகளுக்கமைவான பணிகள் வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை உள்ளவாறான பதவியணி எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 18 பதவிகளுக்கான 64 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் 03 பதவிகளுக்கான 54 உத்தியோகத்தர்களுக்கான மேலதிகமும் காணப்பட்டது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும். |

**4. <u>கணக்களி தன்மையும் நல்லாளுகையும்</u>**

**4.1 சுற்றாடலல் சார்ந்த பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் (2017 ஆகஸ்ட் 30ஆம் திகதிய L.D.B.4/8(XII) திருத்தத்திற்கு அமைவாக எவரும் பிளாஸ்டிக் | கழிவுகளை எரிப்பது தவறானது என்பதை ஏற்றுக்கொள்வதாக | ஒழுங்கான முறையில் கழிவுகள் அகற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடங்கிய கழிவுகள் அல்லது விரைவில் தீப்பற்றக்கூடிய வேறு பொருட்களை திறந்த வெளிகளில் எரிக்கவோ, எரிக்கச் செய்யவோ, அதற்கு ஒத்துழைப்பு வழங்கவோ அல்லது அனுமதி வழங்கவோ கூடாதிருந்த போதும் வேறு பிரிக்கப்படாத கழிவுகள் மற்றும் வைத்திய சாலைகளினால் வழங்கப்பட்டிருந்த மருத்துவக் கழிவுகள் திகம்பதஹா கழிவு முகாமைத்துவ நிலையத்தில் ஆழமான குழியொன்றில் இட்டு எரிக்கப்பட்டிருந்தது. | | |

**4.2 <u>நிலையான அபிவிருத்தி இலக்குகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதேச சபையானது நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயல்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |